*புதுச்சேரி அரசு*

*துணைநிலை ஆளுநர் செயலகம்*

**No. LGS/PRO/2021** **23 ஜூன், 2022**

## பத்திரிகை செய்தி

ஸ்ரீ சத்திய சாய் அன்னபூர்ணா அறக்கட்டளை சார்பில், பள்ளிக் குழந்தைகளுக்கு காலை சத்து பானம் வழங்கும் திட்டத்தை துணைநிலை ஆளுநர் டாக்டர். தமிழிசை சௌந்தரராஜன் இன்று தொடங்கி வைத்தார். துணைநிலை ஆளுநர் மாளிகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாண்புமிகு முதலமைச்சர் திரு. ந. ரங்கசாமி, மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு. ஆ. நமச்சிவாயம், கல்விச் செயலர் திரு ஜவஹர், ஸ்ரீ சத்ய சாய் அன்னபூர்ணா அறக்கட்டளையின் நிறுவனர் சத்குரு ஸ்ரீ மதுசூதன் சாய், கல்வித்துறை அதிகாரிகள் மற்றும் அறக்கட்டளை உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். இந்த திட்டத்தின் மூலம் புதுச்சேரியிலுள்ள சுமார் 20,000 பள்ளிக் குழந்தைகள் பயனடைவார்கள்.

நிகழ்ச்சியில் துணைநிலை ஆளுநர் ஆற்றிய உரையின் சுருக்கம்.

- சத்ய சாய் அறக்கட்டளை நீண்டகாலமாக சமூக சேவைகள் ஆற்றி வருவதை நான் அறிவேன். புதுச்சேரியில் உள்ள பள்ளிக் குழந்தைகளுக்கு சத்துபானம் வழங்கும் திட்டத்தை தொடங்கி இருப்பதற்காக அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.
- ஊட்டச்சத்து குறைபாடு உள்ள குழந்தைகள் இந்தியாவில் அதிகமாக இருப்பதாக உலக சுகாதார நிறுவனம் கூறுகிறது. அதனால்தான் மாண்புமிகு பாரதப் பிரதமர் எப்போதும் குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து அளிப்பதில் கவனம் செலுத்தி வருகிறார். புதிய கல்விக் கொள்கை குழந்தைகளுக்கு கல்வியோடு ஊட்டச்சத்தையும் வழங்குவதை வலியுறுத்துகிறது. இதுவே பாரதப் பிரதமரின் தொலைநோக்குப் பார்வை.
- குழந்தைகளுக்கான ஊட்டச்சத்து என்பது அவர்களது உடலை பாதுகாக்க மட்டுமல்ல படிப்பில் கவனம் செலுத்தவும் உதவுகிறது. குழந்தைகளை மகிழ்ச்சியாக வைக்கிறது. புதுச்சேரியில் உள்ள கர்ப்பிணிப் பெண்களுக்கும், கிராமப் புறங்களில் உள்ள ஏழை-எளிய குழந்தைகளுக்கு இந்தத் திட்டத்தை விரிவுபடுத்த வேண்டும் என்பது என்னுடைய வேண்டுகோள்.